1978 பிப்ரவரி 27]

கூலியை நெல்லாக வழங்குவதற்கு, கண்டிப்பாக கூலி நெல்லாகவே வழங்கப்படவேண்டும் என்பதற்கு ஆவன செய்ய அரசு முயற்சி எடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. க. உராெ. எட்மண்ட் : அமைச்சரவைக்கு, அமைச்சர்களுக்கு கூட்டுப் பொறுப்பு உண்டு என்பதை நான் உணர்வேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை நினைவு படுத்தியதற்கு அவர்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இருந்தாலும் நான் திரு. உமாநாத் அவர்களுக்கு அளித்த பதில், சட்ட மன்றம் நடக்கும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்விகள் கேட்கிறார்கள். அமைச்சர்கள் அதற்கு பதில் அளிக்கிறார்கள். அந்தக் கேள்விக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடம் கேள்வி கேட்டால் அவர்கள் விவரமாக அறிக்கைகளை சேகரித்து கேள்விக்குப் பதில் சொல்ல வாய்ப்பாக இருக்கும். எனவே, ஒரு அமைச்சர் விடையளிக்கவேண்டியதற்கு இன்னொரு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல என்பதைத்தான் இந்தஅவைக்கு நான் சுட்டிக்காட்டினேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: அரசாங்கம் ஸ்டாக் வைத்திருக்கும் அரிசி மிகவும் மோசமாக இருக்கிறது என்று சொல்லப் படுகிறதே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. க. உராெ. எட்மண்ட்: சிலஇடங்களில் கொஞ்சம் தரம் குறைந்த அரிசி ஸ்டாக் இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறேன். அப்பேர்ப்பட்ட அரிசியை பொது விநியோகம் மூலம் மக்களுக்கு வழங்கப்படக்கூடாது என்ற உத்தரவை அரசு கொடுத்திருக்கிறது.

திருவாரூர் நவீன அரிசி ஆலை.

*286 வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடம் ஒப்படைக்கப்பட்ட திருவாரூரில் உள்ள நவீன அரிசி ஆலையின் மதிப்பு கணக்கிடப்பட்டு T. C. M. F. கணக்கிற்கு வந்துள்ளதா?

(ஆ) இல்லை எனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க.உராெ. எட்மண்ட் : (அ) இல்லை.

(ஆ) தமிழ்நாடு உணவுப் பொருள் வர்த்தகக் கழகத்தினிடம் ஒப்படைக்கப்பட்ட நவீன அரிசி ஆலைகளின் மதிப்பு இன்னும் அரசினால் கணக்கிடப்படவில்லை.

திரு. நா. சுந்தரராஜ் : தமிழ்நாட்டிலுள்ள சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் மொத்தம் எல்லா ஆலைகளின் மூலம் மொத்தம் எவ்வளவு விநியோகிக்கப்படுகிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இக்கேள்வி, திருவாரூர் நவீன அரிசி ஆலை பற்றியது. மொத்தம் எவ்வளவு என்று கேட்டால் அதன் விவரம் அமைச்சர் அவர்களிடம் இருக்காது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து தருகிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: இப்போது தஞ்சை மாவட்டத்தில் நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. அப்படி நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறபோது மூட்டை ஒன்றுக்கு அதிகமாக மூன்று கிலோ —58 ப்ளஸ் 3—61 கொள்முதல் செய்கிறார்கள். ஆனால் கொடுக்கக்கூடிய கிரயம் 58 கிலோவிற்குத்தான் கொடுக்கிறார்கள். இந்த நிலையை மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : அப்பேர்பட்ட நிலைகள் ஏற்படுமானால் அவை உடனடியாகத் தவிர்க்கப்படவேண்டும் என்று அரசு ஏற்கனவே உத்தரவிட்டிருக்கிறது.

திரைப்படப் பிரிவு.

*251 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழ்நாடு அரசின் திரைப்படப் பிரிவு இதுவரை எத்தனைப் படங்களை எடுத்துத் திரையிட்டுள்ளது.

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன்: செய்திப்படங்கள் (31—1—1978 வரை 182

விளக்கப்படங்கள் 34